**சாட்சியின் வாக்குமூலம்**

**திருவள்ளூர் மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிமன்றம்**

**அசல் வழக்கு எண் : 98/2012**

**DW2 – திரு.முனுசாமி, த/பெ.வரதன்**

**12.02.2025**

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்

**வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

**நேரம் 15.25 மணி**

எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் நான் தான் போட்டேன், ஆனால் தமிழ் படிக்க தெரியாது. இந்த வழக்கு நடைபெறுகிறது என்பது எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் நான் அந்த கிராமத்தில் வசிப்பதால் எனக்கு தெரியும். ஆசீர்வாதம் இந்த வழக்கு போட்டுள்ளார். ஆசீர்வாதம் இந்த வழக்கு குறித்து என்னிடம் என்ன கூறினார் என்றால் அப்பா வருமானத்தில் எவ்வளவு சொத்து என்று கூறினார். எனக்கும் வேணுக்கும் எவ்வளவு வயது வித்தியாசம் என்றால் எனக்கு ஞாபகமில்லை. எனக்கு என்ன வயது என்றால் 70 வயதிருக்கும். 70 வருடத்திற்குள் வேணு எந்த சொத்தும் வாங்கவில்லை என்றால் எனக்கு தெரியாது. நேரடியாக எனக்கு தெரியாத போது அவருக்கு எவ்வளவு சொத்து உள்ளது என்பது எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் நாங்கள் ஏர் ஓட்டுவோம், களை எடுப்போம் அப்போது தான் தெரியும். எனக்கு எப்போது திருமணமானது என்றால் வருடம் ஞாபகமில்லை, 40 வருடங்கள் ஆகியிருக்கும். திருமணம் முடிந்து நானும் என் மனைவியும் பட்டரவாக்கத்தில் சிறிது நாட்கள் சேர்ந்து வாழ்ந்தோம் என்றால் சரிதான். தகராறின் போது சென்றேன். என்ன தகராறு என்றால் எங்கள் ஊருக்கும் சேரிக்கும் சண்டை வந்து நான் ஊரை விட்டு ஓடிவிட்டேன். அது எந்த வருடம் என்றால் எனக்கு ஞாபகமில்லை. வேணுவை அந்த ஊரில் சில பேர் கையிலும் காலிலும் தாக்கப்பட்டு அவருக்கு காயம்பட்டது எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. 1995ம் வருடம் அந்த ஊரில் வேணுவை ஒரு

கும்பல் தாக்கியது என்றால் எனக்கு தெரியாது. 1995ம் வருடம் நான் அம்பத்தூரில் இருந்திருக்கலாம். அந்த சண்டைக்கு பிறகு வேணுவும் அந்த ஊரில் இல்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அவரை 2000த்தில் அந்த ஊரில் உள்ளவர்கள் ஊருக்குள் விடவில்லை, ஆகவே ஊருக்கு வெளியில் ஒரு கொட்டகை போட்டிருந்தார் என்றால் அவரது நிலத்தில் போட்டிருந்தார். அவருக்கும் ஊருக்கும் அந்த சமயத்தில் தொடர்பு இல்லை என்றால் சரிதான். அந்த சண்டையில் காயம்பட்டதிலிருந்து அவர் உடல் நலம் சரியில்லை என்றால் அவ்வாறு சொன்னார்கள். நான் சென்று பார்க்கவில்லை என்றால் சரிதான், அம்பத்தூரில் இருந்தேன். எனக்கு ஊரில் 10 சென்ட் விவசாயம் நிலம் உள்ளது என்று கூறியுள்ளேன், அதற்கு தனியாக கிணறு இல்லை. ஆசீர்வாதம் நிலத்திலிருந்து தான் தண்ணீர் பாய்கிறது என்றால் சரிதான். வேணுவுக்கும் அவரது முதல் மனைவிக்கும் திருமணம் நடந்தது எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் எனக்கு தெரியாது, எனக்கு அப்போது 10 வயது தான் இருக்கும். 1ம் மற்றும் 2ம் வாதிகள் பிறந்தபோது எனக்கு வாதி குடும்பத்துடன் தொடர்பு இருந்ததா என்றால் பேச்சுவார்த்தையில் தான் இருந்தேன். வேணுவுடன் காவாங்கரை போன்ற இடங்களுக்கு சென்றேனா என்றால் இல்லை. நான் ஊர் பஞ்சாயத்திற்கு உடன் செல்வேனா என்றால் இல்லை. நீதிமன்றத்தில் உள்ள ஆவணத்தில் மேற்படி நான் காவாங்கரைக்கு சென்றதாக கூறியுள்ளேன் என்றால் நான் செல்லவில்லை. அங்கு என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான், ஊர்மக்கள் சென்றிருந்தார்கள். ஆசீர்வாதம் தாயார் சரோஜாவை பெண் பார்க்க செல்லும்போது உடன் சென்றேன் என்றால் சரிதான். அவர் கூனிப்பாளையத்தில் வாத்து மேய்த்துக்கொண்டிருந்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வேணுக்கு சரோஜாவை அங்கிருந்து அழைத்து வந்தார் என்றாலும் திருமணம் நடக்கவில்லை என்றால் திருமணம் நடத்தினார்கள். திருமணம் எங்கு வைத்து நடந்தது என்றால் ஈக்காடு அருகில் உள்ள ஊரில் வைத்து நடைபெற்றது. வேணு அவரின் முதல் மனைவியுடன் எவ்வாறு வாழ்ந்து வந்தார் என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். சரோஜா பற்றியும் முதல் மனைவியுடன் எவ்வாறு சண்டை என்றும் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் அவர் சண்டை எல்லாம் போடுவது கிடையாது. பெரிய அளவில் எந்த சண்டை, சச்சரவுக்கும் வேணு செல்லமாட்டார் என்றால் சரிதான். ஆசீர்வாதத்திற்கும் எனக்கும் எவ்வளவு வயது வித்தியாசம் என்றால் எனக்கு

தெரியாது. மல்லிகாவிற்கு திருமணம் நடக்கும்போது ஆசீர்வாதத்திற்கு எத்தனை வயது என்றால் எனக்கு தெரியாது. அப்போது ஆசீர்வாதம் பிறந்திருந்தார் என்றால் சரிதான். வேணு அவர் குடும்ப விசயத்தை பற்றி என்னிடம் பேசுவாரா என்றால் முக்கியமான காரியங்களை பற்றி மட்டும் பேசுவார். அவர் ஊருக்கு வெளியே கொட்டகையில் இருக்கும்போது நான் சென்று பார்த்தேனா என்றால் ஏர் மாடு பார்க்க ஆள் இல்லை என்பதால் வந்து ஏர் ஓட்டும்போது அவரை பார்த்தேன். அவரை பார்த்த வருடம் எனக்கு ஞாபகம் உள்ளதா என்றால் இல்லை. என் நிலத்தில் ஆசீர்வாதம் தண்ணீர் பாய்ச்ச வேண்டும் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வேணுவின் திருமண பந்தம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நான் நீண்ட காலம் அம்பத்தூரில் இருந்ததால் ஊரில் நடந்த விவரங்கள் தெரியாது என்றால் சரியல்ல. நிலத்தை மல்லிகாவிற்கு வேணு கொடுத்ததாக 20 வருடங்களுக்கு முன்பாக என்னிடம் கூறினார் என்று கூறியுள்ளேன் என்றால் தலா 20 செண்ட் கொடுத்திருப்பதாக என்னிடம் கூறினார். அவர் இறந்து 24 வருடங்கள் ஆகிவிட்டது, நான் பொய்யாக சாட்சியாக அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அவர் தனிப்பட்ட முறையில் எந்த விவரத்தையும் யாரிடமும் கூறமாட்டார் என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சிவகாமியின் ஊருக்கு போனதில்லை என்று கூறியுள்ளேன், அவர் தகாத உறவு வைத்திருந்ததாக நான் எவ்வாறு கூறுகிறேன் என்றால் அவர் தகாத உறவு வைக்கவில்லை. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ள சங்கதிகள் பொய் என்றால் சரியல்ல.

நேரம் 15.54 மணி.

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.